


# யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்



## பரிசில் நாள் அறிக்கை

**18.07.2015**

# யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்

# பரிசில் நாள் அறிக்கை

# 2015

காலம் : 18.07.2015 சனிக்கிழமை

நேரம் : முற்பகல் 9.00 மணி

இடம் : பாடசாலை மண்டபம்

தலைமை

**திரு.நா.கருணாகரன்** அவர்கள்

வித்தியாலய முதல்வர்

முதன்மை விருந்தினர்

**உயர்திரு சு.கிருஷ்ணகுமார்** அவர்கள்

( கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்

**உயர்திரு சர்வேஸ்வரன்** அவர்கள்

(யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர்)

கௌரவ விருந்தினர்

**லயன் திரு.து.மகேந்திரன்**

(கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர்)

பாடசாலைச் சமூகம்

# யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்
# J/Kaithady Kalaivani Vidyalayam

## மகுடவாசகம்

கற்க அது தக நிற்க

## தூரநோக்கு

கைதடிப் பிரதேசத்தின்
மனிதமும் மாண்பும் மிக்க நல்லதோர் சமுதாயத்தை
உருவாக்கவல்ல
முன்னணி ஆரம்பப் பாடசாலையாகத் திகழ்தல்.

## பணிக்கூற்று

நவீன கற்றல் உத்திகளைப் பயன்படுத்துக்கூடியவாறு ஆசிரியவாண்மையை மேம்படுத்தி பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் பாடசாலையின் தூரநோக்கை அடைய அர்ப்பணிப்புடன் செயற்படல்.

# பாடசாலைக் கீதம்

வாழிய கைதடி கலைவாணியே
வாழிய நீடுழி தரணியிலே
(வாழிய.....)

கற்க அது தக நிற்க எனும்
மகுட வாசகம் ஓங்கிடவே
(வாழிய.....)

அன்னையும் பிதாவும் எம் கடவுள்
எழுத்தறிவித்தவன் எம் இறைவன்
என்பன அறிய எமக்குரைத்த
உன்னையும் வாழ்த்தி வணங்கிடவே
(வாழிய.....)

# நிகழ்ச்சி நிரல்

விருந்தினரை வரவேற்றல்

மங்கல விளக்கேற்றல்

இறைவணக்கம்

வரவேற்புரை

பரிசில்நாள் அறிக்கை

பரிசில் வழங்கல்

சிறப்பு விருந்தினர் உரை

பிரதம விருந்தினர் உரை

கலை நிகழ்வுகள்

நன்றியுரை.

# வித்தியாலய முதல்வரின் பரிசில் நாள் அறிக்கை

எமது பாடசாலையின் இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய வலயக் கல்வி பணிப்பாளர் உயர்திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்களே!

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் தென்மராட்சி கல்வி வலய முன்னைநாள் ஆரம்ப கல்வி உதவிக் கல்வி பணிப்பாளரும் தற்போதைய சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அதிபரும் ஆகிய உயர்திரு.ந.சர்வேஸ்வரன் அவர்களே!

இன்றைய நிகழ்வின் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய தலைவரும், துஷா பல் மூக்குக் கண்ணாடியக உரிமையாளரும் ஆகிய லயன் திரு.து.மகேந்திரன் அவர்களே!

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! கோட்டக் கல்விப் பணிப்பாளரே, எமது வலய பாடசாலை அதிபர்களே! தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களே, ஆசிரியர்களே, வலயக் கல்வி அலுவலக கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே, எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, எமது பாடசாலையின் புலம் பெயர் உறவுகளே! பெற்றோர்களே, மாணவர்களே நலன் விரும்பிகளே உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தினை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய நிகழ்விற்கு எமது அழைப்பினை ஏற்று வருகை தந்திருக்கும், தென்மராட்சி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய எமது வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, தாங்கள் எமது வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்ற காலம் முதல் எமது வலய மாணவர் கல்வி அபிவிருத்திக்குப் பல்வேறு செயல் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வெற்றிகண்டு கொண்டிருக்கிறீர்கள். அந்த வகையில் சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தி மீது தாங்கள் கொண்ட அக்கறை காரணமாக போதிய ஆசிரிய வளம் மற்றும் ஏனைய வளங்களையும் வழங்குவதனூடாக கிராமப் புற சிறிய பாடசாலைகள் அண்மைக் காலங்களில் கூடிய வளர்ச்சியைக் கண்டு அதனூடு தமது அடைவு மட்டங்களை உயர்த்தியுள்ளன. அந்த வகையில் எமது வலயத்தின் 2014ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு பெருமளவு அதிகரித்துச் சென்றமையும், அதற்கு கிராமப்புற பாடசாலைகளின் பங்கு உயர்வாக இருந்தமையும் சான்றாகும். இத்தகைய செயல்வீரரான தங்களை வருக வருகவென இருகரம் கூப்பி வரவேற்று அகமகிழ்ந்து நிற்கின்றோம்.

சிறப்பு விருந்தினர் அவர்களே, தாங்கள் ஆசிரியராக இருந்து கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்து ஹோமாகம வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியதோடு தேசிய கல்வி நிறுவக வளவாளராகவும் கடமையாற்றியுள்ளீர்கள். தங்களின் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான வருகை எமது பிரதேசத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். தாங்கள் ஆரம்பக் கல்வி உதவிக் கல்வி பணிப்பாளராக கடமையாற்றிய காலத்திலே எமது வலயம் புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய பெறுபேற்றை பெற்று சாதனை படைத்துள்ளது. அதேபோல் எமது பாடசாலை அதி சிறந்த செயற்பாட்டிற்காக தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு விருதைப் பெற மூலவளராக இருந்து செயற்பட்டுள்ளீர்கள். அத்தோடு எமக்கு அது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கி தேசிய மட்ட ஆவணப்படுத்தலுக்கான வீடியோ தயாரிப்பிற்கு தேவையான முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளீர்கள், தங்களை இப்பாடசாலை, இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வரவேற்பதில் பெருமையடைகிறது.

கௌரவ விருந்தினர் அவர்களே தாங்கள் இப்பாடசாலையின் பழைய மாணவராக இருந்து தற்போது தொழிலதிபராகவும், சமாதான நீதவான் ஆகவும், லயன்ஸ் கழக அங்கத்தவராகவும், கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய தலைவராகவும் விளங்கி வருகின்றீர்கள். தாங்களும் தங்கள் குடும்ப அங்கத்தவர்களும் பாடசாலைக்கும், சமூகத்திற்கும் பல்வேறு சேவைகளையும், உதவிகளையும் வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. தாங்கள் இந் நிகழ்விற்கு கௌரவ விருந்தினராக வருவதையிட்டு நாங்கள் பெரு மகிழ்வு அடைகிறோம்.

## அதி சிறந்த செயற்பாட்டிற்கான விருது

எமது பாடசாலை அதி சிறந்த செயற்பாட்டிற்கான விருதை 2014ம் ஆண்டு பெற்றுள்ளது. அதி சிறந்த செயற்பாடுகளை மதிப்பிட்டு விருது வழங்கும் போட்டியில் 2014 இல் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 பாடசாலைகளில் ஒரே ஒரு தமிழ்ப் பாடசாலையாக எமது பாடசாலை விளங்குவது மிகவும் பெருமைக்கு உரியதாகும். மாணவர் நலனோம்பல் மற்றும் சமூகப் பங்களிப்பு தொடர்பில் எமது பாடசாலை அதிக அக்கறை காட்டுகிறது. மாணவர்களை முச்சக்கர வண்டி மூலம் பாடசாலைக்கு அழைத்து வரல், கொண்டு செல்லல், மாலை நேர வகுப்புக்களை நடாத்துதல், வீடுகளிற்குச் சென்று மாணவர்களது கற்றல் சூழலை ஆராய்தல், மற்றும் சமூகத்திற்குக் குடிநீர் வழங்குதல் தொடர்பில் ஆராயப்பட்டு எமக்கு இவ் விருது வழங்கப்பட்டுள்ளது. இவ் விருதிற்கான வீடியோ படமாக்கல் தொடர்பான படப்பிடிப்புகள் 05.11.2014 அன்று எமது பாடசாலையில் இடம் பெற்றது.

படப்பிடிப்பு வேளைகளில் எமது ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்முடனேயே இருந்து பலவழிகளிலும் வழிகாட்டியுதவியுள்ளார். அத்தோடு எமது

வலயக் கல்விப் பணிப்பாளர் தேவையான நேரத்தில் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் வழங்கியுதவியுள்ளார். இவர்கள் இருவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது பாடசாலைப் படப்பிடிப்பிற்கு அழகுபடுத்தலிற்கான அனைத்துச் செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொண்ட எமது புலம் பெயர் உறவுகள் மற்றும் பழைய மாணவர், பெற்றார் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக திருமதி.நாகேந்திரம் வாசுகி அவர்கள் இச்செலவில் பெரும் பகுதியை புலம்பெயர் உறவுகளிடம் இருந்து சேகரித்து பாடசாலை சமூகத்திற்கு உரிய நேரத்தில் வழங்கி உதவி உள்ளார். அவருக்கு சிறப்பாக பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நிதி சேகரிப்பில் ஈடுபட்ட திருமதி.பரமசாமி சுமதி, உலக சரஸ்வதி அமைப்பின்(W.S.O) அங்கத்தவர்கள் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மாணவர்களிற்கான இலவச போக்குவரத்து வசதி

எமது பாடசாலை மாணவர்களுக்கான இலவச போக்குவரத்திற்கு முச்சக்கர வண்டி சேவை ஒன்று நீண்டகாலமாக நடாத்தப்பட்டு வருகின்றது. இதனால் மாணவர்கள் இலகுவாக பாடசாலைக்கு வந்து போவதுடன் மாணவர்கள் வரவு ஒழுங்கீனம், இடைவிலகல் என்பன இல்லாது காணப்படுகின்றது. இது பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு வாய்ப்பாக அமைகின்றது. இதற்கு பல்வேறு அமைப்புக்கள், கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஊடாக உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் ஆரம்பத்தில் சரஸ்வதி சுவிஸ் கிளையும், பின்னர் சரஸ்வதி லண்டன் கிளையையும், தற்போது உலக சரஸ்வதி அமைப்பும் (W.S.O.) இதற்கான உதவியை வழங்குகின்றனர். அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பௌதீக வள அபிவிருத்தி

கடந்த வருடம் எமது பாடசாலைக் கிணற்று நீரைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டபோது நாம் அது தொடர்பில் புலம்பெயர் பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் தாமாகவே முன்வந்து திருமதி.நாகேந்திரம் வாசுகி,

திருமதி.அமுதலிங்கம் யசோதா ஆகியோர் இணைந்து குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துத் தந்துள்ளனர். இதன்மூலம் குடிநீர்ப் பிரச்சினை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டது. அதுமட்டுமன்றி அந்நீரானது மிகவும் நல்லநிலையில் காணப்படுவதால் பொது மக்களும் பெறுவதற்கான குழாய் இணைப்பையும் ஏற்படுத்தித் தந்துள்ளனர்.

மேலும் எமது பாடசாலை நீர்ப்பம்பி செயற்றிறன் குறைந்ததாகக் காணப்பட்டதால் எமது பாடசாலைக்கு திருமதி.செல்வராசா கௌசலா அவர்கள் நீர்ப்பம்பியொன்றைத் தந்து அதனைப் பொருத்தி உதவியுள்ளார்.

திரு.செல்லத்துரை வினோராஜ், திரு.சின்னத்துரை தசோதரன் ஆகியயோர் எமது பாடசாலையில் பூசப்படாதிருந்த மதில் சுவர்களின் முன் பக்கத்தினைப் பூசி உதவியுள்ளார்கள்.

நீண்ட காலமாகப் போட்டோப் பிரதி இயந்திரமொன்று இல்லாமை பெருங்குறையாக இருந்த போது அதனைப் புலம்பெயர் உறவுகள் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்துள்ளனர். இது மாணவர் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகட்கும், நிர்வாக நடைமுறைகட்கும் பெரும் உதவியாகவுள்ளது.

மேலும் பாடசாலையில் காணப்பட்ட கணனி இயங்கமுடியாத நிலையில் இருந்தபோது திரு.நாகேந்திரம் கணேத் அவர்களும் சின்னாண்டி புலேந்திரன் அவர்களும் வருகைதந்து கணனித் தொகுதியொன்றையும் பிறிண்டர் ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். இது கற்றல் கற்பித்தலுக்கும் அலுவலகத் தேவைகட்கும் உதவியாக உள்ளது.

எமது பாடசாலையில் நுழைவாயில் பெயர்ப் பலகை இல்லாத குறையை நீக்கும் பொருட்டு கடந்தவருடம் புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியால் நுழைவாயில் பெயர்ப் பலகை அமைக்கப்பட்டமை பாடசாலையின் அழகை மெருகூட்டுவதாயுள்ளது.

நீண்ட காலமாக எமது பாடசாலையில் காணப்பட்ட சிறிய அலுவலகத்தை விஸ்தீரணப்படுத்திட வேண்டும் என நினைத்திருந்த எண்ணம் இவ்வருடம் கைகூடி 20 x 20 அடி விஸ்தீரணமுள்ள அலுவலக அறை அமைக்கப்பட்டு சிறப்பாக உள்ளது. கல்வித் திணைக்கள நிதியிலிருந்து இவ்வேலை இடம்பெற்றது.

## கல்வி அபிவிருத்தி

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் ஆசிரியர்களின் சேவை பாராட்டுதற்குரியது. இவர்களின் அளப்பரிய சேவையினால்

எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்தி கண்டு வருகின்றது. எமது பாடசாலையில் இருந்து 2014ஆம் ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 92 சதவீதமான மாணவர்கள் 70 புள்ளியிலும் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றிருப்பதோடு இரு மாணவிகள் சித்தியடைந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதில் ஞா.ரனுசியா 160 புள்ளியையும் ஜெ.கிஷாளினி 150 புள்ளியையும் பெற்றுள்ளனர். இவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகிறோம். இவர்களிற்கு கற்பித்த ஆசிரியர் திரு.க.சிவமூர்த்தி அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றோம்.

## புலமைப் பரிசில் பரீட்சை புள்ளிப்பகுப்பாய்வு

| ஆண்டு | தோற்றியோர் | 100 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள் | 100 புள்ளிக்கு மேல் சதவீதம் | 70 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள் | 70 புள்ளிக்கு மேல் சதவீதம் | சித்தி | சித்தி பெற்றவர்கள் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2014 | 13 | 06 | 46% | 12 | 92% | 02 | 15% |
| 2013 | 17 | 07 | 41% | 11 | 65% | 00 | 00% |
| 2012 | 08 | 04 | 50% | 06 | 75% | 00 | 00% |
| 2011 | 11 | 05 | 45% | 07 | 64% | 00 | 00% |
| 2010 | 05 | 01 | 20% | 05 | 100% | 00 | 00% |

2014 முற்பகுதியில் எமது பாடசாலைக்கு வருகை தந்திருந்த புலம்பெயர் உறவுகளான திரு.நா.கனோத் அவர்களும் திரு.ஜ.கிரிதாஸ் அவர்களும் மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு ஒவ்வொரு கணனி தருவதாக உறுதியளித்து சென்றனர். அத்தோடு பயிற்சிப் புத்தகங்களும் வாங்கி மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்தனர். அன்று தாம் உறுதியளித்தது போல் இன்று கணனிகளை வாங்கி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவிகளுக்கும் தத்தமது குடும்பத்தினருடாக வழங்கவுள்ளனர். இவர்களது இத்தகைய செயற்பாடு எமது மாணவர்களுக்கு பெரும் ஊக்கத்தினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மாணவர் ஆளுமை மேம்பாடு

மாணவர்கள் தினந்தோறும் காலைப் பிரார்த்தனைகளை தாமே ஒழுங்கமைத்து சுழற்சி முறையில் காலை நிகழ்வுகளை நடாத்தி வருகின்றனர். இது பிள்ளைகளின் ஆளுமை, தலைமைத்துவ ஆற்றல்களை வளர்த்துவிடும் செயற்பாடாகும்.

மாணவர் தொகை குறைவாக இருக்கின்ற போதிலும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு தரம் 1, 2 ற்குப் புறம்பாகவும் தரம் 3, 4, 5 ற்குப் புறம்பாகவும் நடத்தப்பட்டு வருகின்றது.

## இணைபாடவிதானம்

இணைபாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர். துரித கணிதப் போட்டி, அறநெறிப்போட்டி, பொது அறிவு வினா விடைப் போட்டி, செயற்பட்டு மகிழ்வோம் போட்டி, சித்திரப் போட்டி, மற்றும் தமிழ் மொழித்தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி முதலியவற்றில் பங்கு பற்றியுள்ளனர். எமது பாடசாலைக்கு மேலைத்தேய இசைக் கருவித்தொகுதி கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் எமது பாடசாலையில் மேலைத்தேய வாத்தியக் குழு (பான்ட் அணி) சிறந்த முறையில் இயங்கி வருகின்றது.

## மன்றங்கள்

மாணவர்களது அறிவாற்றல், ஆளுமை, தலைமைத்துவம் என்பவற்றை வெளிப்படுத்த மன்றங்கள் துணை புரிகின்றன. அந்த வகையில் ஆரம்பப் பிரிவு மாணவர் மன்றம், இந்துமாமன்றம், சுகாதார மன்றம், சுற்றாடல் கழகம் என்பன செயற்பட்டு வருகின்றன.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர் சங்கம்

பாடசாலையின் அபிவிருத்தியை முன்னெடுப்பதில் மேற்படி அமைப்புக்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றன. பாடசாலை அபிவிருத்திக் குழு சிறப்பாக இயங்கி வருகின்றது. அதே போல் பழைய மாணவர் சங்கமும் மிகவும் துடிப்புடனும், செயலாற்றலுடனும் இயங்கி வருகின்றது. பாடசாலையில் உள்ள ஏனைய குழுக்களும் பயனுறுதி மிக்க வகையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைக்கு சமூகத்தின் பங்களிப்பு

எமது பாடசாலைக்கு சமூகத்தின் பங்களிப்பு மிக அதிகமாகவுள்ளது. நாம் கேட்கும் போதெல்லாம் சனசமூக நிலையம், மாதர் சங்கம், இளைஞர் கழகம், பெற்றோர் போன்றோர் பாடசாலைக்கு வருகை தந்து சிரமதானங்கள் மற்றும் உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளையாட்டுப் போட்டிகளின்போது சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. இவ்வேளையில் இவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு பாடசாலை மாணவர்களுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழான மதிய உணவுச் செயற்பாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது. இதற்கு எமது பாடசாலையில் சமையல் வேலைகளை ஆற்றுவதற்கு திருமதி.S.சியாமளா அவர்கள் எவ்வித கொடுப்பனவுமின்றி மிக ஆர்வத்துடன் தொண்டாற்றி வருகின்றார். இவருடைய சேவை பாடசாலைக்கு மிக முக்கியமானதாக விளங்குகின்றது. அவருக்கு எமது நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஆசிரியர் வளம்

| பெயர் | தரம் | தகைமை |
|---|---|---|
| 1. திரு.நா.கருணாகரன் | SLPS 2 - II | B.A.,B.E.D. PGDE |
| 2. திரு.க.சிவமூர்த்தி | SLTS 2 - II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 3. திருமதி.க.மகிந்தன் | SLTS 2 - II | B.A. PGDE |
| 4. திருமதி.சி.சேயோன் | SLTS 3 - I | B.F.A |
| 5. செல்வி.க.தர்மவதனா | SLTS 3 - II | B.Sc |
| 6. திருமதி.சி.கிருஷ்ணமோகன் | SLTS 2 - II | பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |
| 7. திருமதி.ச.கலானந்தன் | SLTS 2 - II | B.A PGDE பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி |

**இவர்களில் 2014ஆம் ஆண்டு எம்முடன் இணைந்து கொண்டவர்கள்**

திருமதி.சி.சேயோன்
செல்வி சு.தர்மவதனா

**2015ஆம் ஆண்டு எம்முடன் இணைந்து கொண்டவர்கள்**

திருமதி.சி.கிருஷ்ணமோகன்
திருமதி.ச.கலானந்தன்

**2014ஆம் ஆண்டு மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்**

திருமதி.ய.சிறிகரன்

**2015ஆம் ஆண்டு மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்**

திருமதி.த.கிருஷ்ணன்

மாற்றம் பெற்றுச் சென்றுள்ள இவர்கள் எமது பாடசாலையில் ஏறக்குறைய 10 வருடங்கள் கடமையாற்றி அளப்பரிய சேவை புரிந்துள்ளனர். இவர்களை எமது பாடசாலைச் சமூகம் என்றும் மறப்பதற்கு இல்லை.

**தொண்டர் ஆசிரியர் விபரம்**

செல்வி.ஜெ.ரோபிதா ( 2012 - 2014)

2014ஆம் ஆண்டு முன் அரைப்பகுதிவரை தொண்டர் ஆசிரியராக இருந்து நீண்ட காலமாக நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையினை நீக்கும் முகமாக கற்றல் கற்பித்தல் சேவையின் பொருட்டு அளப்பரும் சேவை ஆற்றி உள்ளார். அவருக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுவதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமகிழ்ச்சி அடைகிறது.

## மாணவர் விபரம் 2014

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 3 | 4 | 7 |
| 2 | 4 | 3 | 7 |
| 3 | 2 | 5 | 7 |
| 4 | 4 | 4 | 8 |
| 5 | 3 | 10 | 13 |
| | ---- | ----- | ----- |
| | 16 | 26 | 42 |

2015இல் தரம் 1இல் 10 மாணவர்கள் இணைந்துள்ளனர்.

## பரிசில் பெறுவோர் விபரம் - 2014

2015 தரம் : 01

பெயர்
1. வி.தர்சனன்
2. வி.யஸ்மிதன்
3. து.ரிஷிதரன்
4. சு.கிதுர்சன்
5. கே.அபிஷாந்
6. அ.யூட் யஸ்வின்
7. ச.மபிஷா
8. ஜெ.டர்சிகா
9. சி.லிஷானா
10. சி.சுபஸ்திகா

2014 தரம் : 01

பெயர்
1. ஜெ.யதுசன்
2. ஜெ.ஷஜீன்
3. ற.ரம்சிகன்
4. சு.அட்சயா
5. ஜெ.டிலானி
6. ந.விதுசனா
7. வே.வேணுசா

## தரம் - 02

1. லெ.ஜிபுசன்
2. ரி.மதுசன்
3. பு.பிரியந்
4. ம.வர்ணயா
5. செ.சிஷாளினி
6. ந.கம்சிகா

## தரம் - 03

1. ந.மதுஷிகன் - சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்
2. பொ.லவநீதன் - சுத்தம், ஒழுக்கம்
3. சு.சுஜீவா - சமயம், தமிழ், கணிதம்
4. சே.லக்சனா - சுத்தம்
5. வீ.சபிநயா
6. ர.மதுஷிகா - சமயம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்
7. ந.கம்ஷா - கணிதம், சுற்றாடல், ஆங்கிலம்.

## தரம் - 04

1. ஜெ.கிருஷிகன் - தமிழ்
2. செ.தர்மிகன் - கணிதம்
3. ர.ஷாம்நாத் - சமயம்
4. வே.தேனுயன் - சுத்தம்
5. சு.அபிநயா - தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல்
6. சு.கிஷாளினி - தமிழ், சமயம், சுற்றாடல், ஆங்கிலம்
7. த.சிந்துயா - சுற்றாடல், ஆங்கிலம்
8. து.றஜித்தா - கணிதம்


## தரம் - 05

1. ஆ.சஞ்சாய் - புலமைப் பரிசில் பரீட்சை 70 புள்ளிகளுக்கு மேல்
2. சி.டர்சன் - சித்திரம், புலமைப்பரிசில் பரீட்சை 70 புள்ளிகளுக்கு மேல்
3. செ.லகீன் - கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், புலமைப்பரிசில் 70 புள்ளிகளுக்கு மேல்
4. ஜெ.கிஷாளினி - சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், புலமைப்பரிசில் சித்தி.
5. ர.அபிநயா - சமயம், புலமைப்பரிசில் 70 புள்ளிகளுக்கு மேல்
6. ஞா.ரனுசியா - சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், புலமைப்பரிசில் சித்தி
7. தி.ஷாயினி - வரவு, புலமைப்பரிசில் 70 புள்ளிகளுககு மேல்.
8. பி.பதுர்சிகா - வரவு, புலமைப்பரிசில் 70 புள்ளிகளுக்கு மேல்.
9. பு.பிரியங்கா - வரவு, புலமைப்பரிசில் 70 புள்ளிகளுக்கு மேல்
10. சி.டர்சிகா - புலமைப்பரிசில் 70 புள்ளிகளுக்கு மேல்.
11. ஜெ.டயானா - சுத்தம்
12. ம.பூமிக்கா - புலமைப்பரிசில் 70 புள்ளிகளுக்கு மேல், வரவு
13. அ.அபினா - சமயம், தமிழ், புலமைப் பரிசில் 70 புள்ளிகளுக்கு மேல்.

## பாடசாலைக்கு உதவி வழங்கும் புலம் பெயர் உறவுகள்.

1. சின்னத்தம்பி துயின்சன்
2. சின்னத்தம்பி றோன்சன்
3. சின்னையா விஜயக்குமார்
4. சின்னையா றஜிக்குமர்
5. சின்னத்துரை ராஜீவ்
6. கந்தசாமி விபூஜன்
7. சரவணமுத்து கண்ணன்
8. மாதர் சந்திரன்
9. செல்வக்கண்டு அனோயன்
10. மகேந்திரம் கவிதா
11. கனகலிங்கம் யோகேஸ்வரி
12. அமுதலிங்கம் யசோதா
13. நாகமணி விஜயக்குமார் ஜெயந்தி
14. வேலன் தனபாலசிங்கம்
15. சின்னாண்டி புலேந்திரன்
16. மோகன் மல்லிகா
17. யோகேந்திரன் (இந்தி) குணா
18. செல்லன் சத்தியசீலன்
19. இலட்சுமணன் யோகதீசன்
20. நாகேந்திரம் வாசுகி
21. சின்னத்துரை யசிந்தன்
22. சந்திரன் விமலா
23. சிவராசா நவலீலா
24. தேவசேனா நிதர்ஷன்
25. ஜெயந்திர்ராஜா சந்திரவதனி
26. கந்தையா சதீஸ்ரூபன்
27. சண்முகம் உருத்திரதாஸ்
28. இரத்தினம் கோபி
29. சரவணமுத்து கிரிதரன்
30. ஐயங்கன் கிருதாஸ்
31. ஐயங்கள் கமலதாஸ்
32. இராஜலிங்கம் மாலதி

33. முருகன் குணரத்தினம்
34. சோதிலிங்கம் ரூபா
35. நாகராசா கனோத்
36. கந்தன் புஸ்பராஜா
37. பரமசாமி சுமதி
38. சின்னத்துரை வினோதன்
39. சின்னராஜா கிஷோராஜ்
40. சின்னராஜா ஜெயந்திராஜா
41. மோகனராஜா ஜீவா
42. செல்லத்துரை துஷ்யந்தன்
43. செல்வராஜா கௌசலா
44. மாதன் சிவப்பிரகாசம்
45. கோபால் சிவசுதன்
46. சின்னத்தம்பி புலேந்திரபாலன்
47. சின்னத்தம்பி றஞ்சன்
48. கதிரன் நாகேஸ்வரன்
49. இராஜலிங்கம் சதீஸ்குமார்
50. சின்னாண்டி ருவேந்திரன்


2014 புலமை பரிசில் சாதனையாளர்கள்